RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1327

OPEN ACCESS

# இன்னா நாற்பதில் இனியவை

ஜெ. அம்சவள்ளி [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, திரு கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரி, விருத்தாசலம்-606001, தமிழ்நாடு, இந்தியா

# Inna Narpathil Iniyavai (Best Forty in Morals)

J. Amsavalli [a, *]

[a] Department of Tamil, Thiru Kolanjiappar Government Arts College, Vriddhachalam–606001, Tamil Nadu, India

* Corresponding Author: amsaroshan@gmail.com

Received: 02-06-2022
Revised: 20-08-2022
Accepted: 13-09-2022
Published: 21-11-2022

Check for updates

**ABSTRACT**

The dark period of the Sangam (AC 300–600) was the era of the emergence of charity books. They realized that ethics and restrictions are necessary for a human being to live as a human being. Tamils have taught moral principles to the world. Human life is a mixture of pleasure and pain. For a happy life, it is enough to avoid the activities that cause pain. Just as a sick person needs medicine, so does an uncharitable person need medicine in the form of endowments. It is excellent to list the deplorable acts against humanity. Our forefathers have worked with the aim that future generations should also have the intelligence to know and act on actions that always have adverse consequences. If morality is to prevail in society, it is necessary to follow the virtues of life. The moral texts were composed with the aim of emphasizing virtues. Thus, the purpose of this article is to convey the philosophy of life and the sweet messages of Inna Narpathu, which symbolize what is not moral.

**Keywords:** Sangam Period, Virtues, Inna Narpathu, Moral.

## முன்னுரை

மனித வாழ்க்கை மகத்துவம் நிறைந்தது. வாழும் வாழ்வானது ஒருமுறைதான். இப்படிப்பட்ட வாழ்வில் மனிதர்கள் காலத்தை வென்று செயலால் தியாகத்தால் நெறி தவறாது வாழ்தல் வேண்டும். வாழும் காலத்தில் பொருள்தேவைக்காக மட்டும் வாழாமல் பொருள் பொதிந்த வாழ்வு வாழ்தல் வேண்டும். எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற கட்டுப்பாடு விதித்துக் கொண்டவர்கள் நம் தமிழர்கள். மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு துன்பம் தரும் செயல்களைத் தவிர்த்தாலே போதும். சமூகத்தில் ஒழுக்கம் நிலை பெற வேண்டுமாயின் வாழ்வியல் அறங்களை பின்பற்றுவது அவசியம். அறங்களை வலியுறுத்திக் கூறுவதையே நோக்கமாகக் கொண்டு அற நூல்கள் இயற்றப்பட்டன. அவ்வகையில் அறம் அல்லாதவை எவை என்பதை அடையாளப்படுத்தும் இன்னா நாற்பதின் இனிய செய்திகளை வாழ்வியல் தத்துவத்தை உணர்த்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

## இன்னா நாற்பது

உலகம் நிலையில்லாதது என்பதைப் பல நேரங்களில் மனிதனுக்கு வரும் துன்பங்கள் நினைவூட்டுகின்றன. இன்பங்களை ஏற்கும் மனம் துன்பங்களை ஏற்க மறுக்கின்றது. வாழ்க்கையில் இன்னா தரும் செயல்கள் எவை என எடுத்துக் காட்டித் தனித்து நிற்கும் சிறப்புக்குரியது இன்னா

நாற்பது. இந்நூலை இயற்றிய கபிலர் பிற்காலத்தவர். திருக்குறள், நாலடியார் போன்று அகரவரிசையில் கூறவில்லை. இருப்பினும் சங்கம் மருவிய காலகட்டத்தில் காணப்பட்ட இன்னாதன பற்றி நன்றாக எழுதியுள்ளார். இன்னா நாற்பதில் கடவுள் வாழ்த்து நீங்கலாக நாற்பது பாடல்கள் உள்ளன. ஒவ்வொரு பாடலிலும் ஒவ்வொரு கருத்திற்கு பின்னும் இன்னா என எடுத்துக் கூறுதலின் நூலுக்கு இன்னாநாற்பது என பெயர் வந்தது.

## இன்னா என்பதன் விளக்கம்

இவ்வுலக இயல்பும் இயற்கையும் கொடியது. ஆதலால் இவ்வுலகின் தன்மை அறிந்தோர் வீடுபேறு அடைவதற்கான நற்செயல்களைச் செய்வீர்களாக என்பதாகப் பின்வரும் புறநானூற்றுப் பாடல் தெரிவிக்கின்றது. இதனை,

"இன்னாது அம்ம இவ்வுலகம்

இனிய காண்க இதன்

இயல்புணர்ந்தோரே"

என்கிறது (Avvai Duraisamy pillai, 1966). இன்னா என்பதற்கு துன்பம் என்று பொருள். இன்னா என்பதனைச் சில பாடல்களின் இனிமையன்று, தகுதியன்று எனவும் கபிலர் கையாண்டுள்ளார். திருவள்ளுவர் இன்னாசெய்யாமை என்ற ஒரு அதிகாரத்தையே படைத்துள்ளார். இன்னா செய்தாரை ஒருத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல் என்ற இக்குறளில் வள்ளுவர் துன்பம் என்ற பொருளைக் கையாண்டுள்ளார். தனக்கு துன்பம் செய்தவரைத் தண்டித்தல் என்பது அவரே நாணும் படியாக அவருக்கு நன்மைகளைச் செய்து, அவர் செய்த தீமையையும் தான் செய்த நன்மையையும் மறத்தல் ஆகும்.

## மனித வாழ்வில் இன்னல்கள்

இயற்கை சார்ந்த வாழ்விலிருந்து மாற்றங்கள் நிகழ்ந்த போது சங்க இலக்கியத் தொடர்ச்சியில் இடைவெளி நிகழ்ந்ததாக கூறுகின்றனர். ஆட்சி மாற்றங்களால் குறிப்பாகக் களப்பிரர் வருகையானது மக்களின் வாழ்வில் குறுக்கிட்ட பொழுது ஒழுக்க நெறியில் மாற்றங்கள் நேர்ந்தன. களப்பிரர் காலகட்டத்தில் எழுந்த இலக்கியங்கள் நீதி நெறிகளை வலியுறுத்தி எழுந்தவை. மனித சமுதாயத்தை வழிநடத்தியும் நல்வழிப்படுத்தியும் அறங்களை கூறிவந்தனர். சமூகத்தில் வாழும் மக்கள் இன்ப துன்பங்களில் இரண்டறக் கலந்தவர்கள். நன்மை, தீமை எதுவென்று பகுத்தறியத்தக்க அறிவை உடையவர்களாக இருந்தனர்.

## இல்லறத்தில் இன்னா

இல்லறம் என்பது குடும்பமாகும். இல்லறத்தில் அறத்தைக் கடைபிடிக்க வேண்டும் என்பதைத்தான் அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை என்கிறது வள்ளுவம்.

"அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்

பிறன்பழிப்ப தில்லாயின் நன்று"

என்ற இக்குறளில் அறம் என்று சிறப்பித்து சொல்லப்பட்டது இல்லறமாகும். குடும்பமாக வாழும் பொழுது மகிழ்ச்சி இருந்தாலும் சுற்றத்தாருடன் சேர்ந்து வாழ்வதுதான் மகிழ்ச்சி (Parimelalhagar, 1986). சுற்றத்தார் இல்லாமல் வாழும் வாழ்க்கையானது மிகுந்த துன்பத்தைத் தரும் என்கிறார் கபிலர். இதனை,

"பந்தம் இல்லாத மனையின் வனப்பு இன்னா"

பந்தம் என்பது சுற்றம் ஆகும் (Gowmareeshwari, 2012). சுற்றம் இல்லாத வீட்டின் அழகு துன்பத்தைத் தரும். கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்பது பழமொழி. சுற்றத்தாரோடு கூடி வாழும் வாழ்வுதான் மனநிறைவைத் தரும் என்பது புலனாகிறது. மேலும் இல்வாழ்வுக்குரிய அறச்செயலில் இருந்து நெறி பிறழாமல் நடக்க வேண்டுமானால் நெருங்கிய சுற்றத்தார்க்கு நேர்ந்த துன்பங்களைப் போக்கத் தலைவியாகிய நீ சிலகாலம் என் பிரிவை ஆற்றி இருப்பது அவசியம் என்று தலைவன் கூறுவதை,

"அறந்தலைப் பிரியாது ஒழுகலும் சிறந்த

கேளிர் கேடு பல ஊன்றலும் நாளும்

விருந்தா உள்ளமொடு இருந்தோர்க்குஇல்"

என்கிறது. இப்பாடல் வரிகள்

மேலும் சங்ககாலம் மட்டுமல்ல சங்கமருவிய காலமும் போர்க்குணம் படைத்ததாகவே இருந்தது. போர்க்களத்தில் மடியும் உயிர்களை எண்ணி வருத்தம் அடைந்தனர் (Venkatasamy Nattar, 2018). தந்தை, மகன், கணவன் போன்றோரை போருக்கு அனுப்புபவள் பெண். சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே என்கிறது புறநானூறு. தந்தை இல்லாத மகனின் நிலைமை துன்பத்தைத் தரும் என்பதை,

"தந்தை இல்லாத புதல்வன் அழகின்னா"

எனச் சுட்டுவதன் மூலம் தந்தை, மகன், கணவன் என ஆண்கள் முன்னிலைப் படுத்தப்பட்டதை உணர முடிகிறது (Gowmareeshwari, 2012). சங்க காலத்தில் பெண்கள் கணவனைத் தெய்வமாக மதித்து ஒழுகினர். அதன் தாக்கம் தான் சங்கம் மருவிய காலத்திலும் காணப்பட்டது. திருமணம் செய்து கொண்ட கணவன் மனைவி இருவரில் மனைவி கணவனுக்கு அடங்கி நடக்க வேண்டும் என்கிறார் கபிலர். அப்படி அடங்கி நடக்காத மனைவிக்கு மிகப்பெரிய துன்பத்தை அளிக்கும். இதனை,

"ஆர்த்த மனைவி அடங்காமை நன்கின்னா"

என்கிறது (Gowmareeshwari, 2012). மேலும்,

"பிறன் மனையாள் பின்னோக்கும் பேதமை இன்னா

மறமிலா மன்னர் செருப்புகுதல் இன்னா

வெறும்புறம் வெம்புரவி ஏற்றின்னா

திறனிலான் செய்யும் வினை"

நன்மை, தீமை இரண்டுக்குமிடையில் திறன் இல்லாதவன் மேற்கொள்ளும் வினையோ துன்பத்தைத் தரும் என்கிறது (Gowmareeshwari, 2012).

"வினையே ஆடவர்க்கு உயிரே வாணுதல்

மனை உறை மகளிர்க்கு ஆடவர் உயிர்"

என்று சங்க இலக்கியம் சுட்டும் (Avvai Duraisamy pillai, 2010). உயிர் ஒத்த வினையினை ஆடவன் செய்தாக வேண்டும். செய்யத் தகாத செயலை மேற்கொண்டால் அவ்வினை துன்பமாகும். நல்வினைக்கு எதிரான தீவினை வந்து நேரும் பொழுது அது புகழுக்கு மாறாக பழியினை கொடுக்கும். அக்கால மக்கள் அவசரமாக செல்வதாக இருந்தால் தூரப் பயணங்களுக்கு துணையாவது குதிரை. அக்குதிரையின் மீது அமர்ந்து செல்லும் பொழுது அழுத்தம் இன்றி பயணம் இனிதாக குதிரையின் முதுகில் சேணம் வைப்பர். அச்சேணம் இல்லை எனில் பயணம் கொடுமை ஆகிவிடும். பயணம் கெட்டுப்போவதுடன் பயண நோக்கம் கெட்டுவிடும். அதுபோல வாழ்க்கையும் பயணம்தான் அதற்குத் துணையாக இருப்பவள், வருபவள் மனைவி. இருவர் தொடங்கும் இல்லற வாழ்வில் கருத்து ஒருமித்து

வாழ்வதே நல்லறம். குழந்தையைப் பெற்றெடுப்பதிலும் அக்குழந்தையை நன்கு வளர்ப்பதிலும் அதிகப்பங்கு தாய்க்கு தான் உண்டு. குழந்தைக்காகத் தன்னையே தியாகம் செய்பவள் தாய். இதனை,

"நோன்று அவிந்து வாழாதார் நோன்பின்னா ஆங்கின்னா

ஈன்றாளை ஓம்பா விடல்"

என்கிறது இப்பாடல் (Gowmareeshwari, 2012). தனக்கு வரும் துன்பங்களைப் பொறுத்து மனத்தை அடக்கி வாழ முடியாதவர்கள் நோன்பு இருத்தல் துன்பமாகும். அது போன்று பெற்ற தாயை வயதான பிறகு கண்ணும் கருத்துமாக கவனிக்க வேண்டும். அவ்வாறு கவனிக்காமல் விடுதல் துன்பத்தை உண்டாக்கும். குழந்தைப்பேறு உடையோர் மாண்புடைய தலைமைப்பேறு உடையவர்களாக கருதப்பட்டனர். இதனை,

"இம்மை உலகத்து இசையொடும் விளங்கி

மறுமை உலகமும் மறுவின்றி எய்துப

செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்

சிறுவர் பயத்த செம்மலோர் எனப்

பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்"

என்கிறது (Avvai Duraisamy pillai, 2010). நற்பண்புகளை உடைய பகைவரும் விரும்பும் குற்றமற்ற அழகு உடைய பிள்ளைகளைப் பெற்றவர்கள் உலகத்தில் புகழ் உடன் விளங்கி மறு உலக வாழ்க்கையைக் குற்றம் இன்றி அடைவார்கள்.

## கல்வி

அறியாமை என்னும் இருளை அகற்றப் பயன்படுவது கல்வி ஆகும். அறிவை வளர்க்கவே கல்வி. இதற்கு சிறந்த கருவி நூல்களே. தனி மனிதனின் வாழ்வையும் நாட்டையும் உயர்த்த வழி செய்வது கல்வி. கற்பதனால் சிறப்பும் கல்லாமையால் இழிவும் வந்து சேரும். கல்லாத பெண்கள் களர்நிலம் போன்றவர்கள் புல் விளைந்திடலாம் நல்ல புதல்வர்கள் விளைந்திடார் என்பார் பாரதிதாசன்.

நன்று எது, தீது எது எனப் பகுத்து அறியும் அறிவைக் கல்வி கற்பதினால் பெற முடியும். கல்வியைக் கண்ணுக்குச் சம்மாகக் கூறுவர். கண் இருந்தாலும் பார்வை இருந்தால் தான் பார்க்க முடியும். அதுபோல மனிதனாகப் பிறந்தும் கற்றால் தானே அறிவுக் கண் திறக்கும். இதனை,

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்

கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

என்பது வள்ளுவர் வாக்கு. கல்வியைக் கண்ணாகக் குறிப்பிடுவர் (Parimelalhagar, 1986). மற்றெதையும் கண்ணுக்கு நிகராகக் கூறுவதில்லை.

புல்லை உண்கின்ற குதிரையை மணி இல்லாமல் ஏறிச் செல்லுதல் துன்பமாம். கல்வியறிவு இல்லாதவர் கூறும் காரியத்தின் பயன் துன்பமாகும். அவ்வாறே பலர் நடுவே அவமானப்படுதல் பெருந்துன்பம் என்கிறார் புலவர். இதனை,

"புல்லார் புரவி மணியின்றி ஊர்வின்னா

கல்லார் உரைக்கும் கருமப் பொருளின்னா

இல்லாதார் நல்ல விருப்பின்னா ஆங்கின்னா

பல்லாருள நாணப்படல்"

என்ற பாடலடிகள் கல்லாதார் அடையும் இழிநிலையை எடுத்துரைக்கிறது (Gowmareeshwari, 2012). மேலும் எண்ணும் எழுத்துமாகிய கல்வியை அறியாதவன் செய்யும் காரியமும் துன்பத்தைத் தரும் என்பதனை,

"இன்னா எண்ணிலான் செய்யும் கணக்கு"

என்ற பாடலடி கல்வியின் அவசியத்தை எடுத்துரைக்கிறது (Gowmareeshwari, 2012).

கல்வி கற்கவில்லையெனில் துன்பம். அதைவிடக் கல்விக் கற்றவன் சிறந்த நூல்களைப் படிக்காதிருத்தல் பெருந்துன்பமாகும். அறிவைப் பெருக்கிக் கொள்ள சிறந்த ஆயுதங்கள் புத்தகங்களே. கண்டதைக் கற்றால் பண்டிதனாகலாம் என்பது பழமொழி. கல்விக்கு என்றுமே வயதாகாது. கல்வியைக் கற்பவருக்கு வயதாகலாம். கல்வி கற்றவர்கள் சிறந்த நூல்களை விரும்பி கற்கவில்லையெனில் பெருந்துன்பம் என்கிறார் கபிலர். இதனை,

"விழுத்தகு நூலும் விழையாதார்க்(கு) இன்னா"

என்னும் பாடலடி கற்பதின் பயனையும் கல்லாமையின் இழிவையும் எடுத்துரைக்கிறது. கல்வியைக் கற்பதோடு நிறுத்தாமல் பிறருக்குக் கற்பிப்பதன் மூலமாகவும் கல்வியை அதிகமாகக் கற்க முடியும் (Gowmareeshwari, 2012).

## நட்பு

சங்க காலத்தில் நட்பானது மதிக்கப்படும் ஒன்றாக இருந்தது. ஒரு மனிதர் மற்றொரு மனிதரிடம் கொள்ளும் அன்பே நட்பாக மாறுகிறது. நட்பு கொள்வது தவறல்ல. யாரிடம் நட்புக் கொள்கிறோம் என்பதுதான் கவனிக்கத்தக்கது. துன்பம் நேரும்போது ஓடி வந்து உதவி செய்யும் நட்பே உண்மையான நட்பு. நற்குணமுடையோரிடமும், சான்றோர் பெருமக்களிடமும் கொள்ளும் நட்பே சாலச்சிறந்தது. ஒருவருடன் முகம் மலரும் வகையில் நட்பு கொள்வது நட்பன்று. அன்பால் மனமும் மலர நட்புக் கொள்வதே நட்பாகும் என்பதனை,

"முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து

அகம்நக நட்பது நட்பு"

என்கிறார் (Parimelalhagar, 1986). முகத்துக்கு முன்பாக அன்பாகப் பேசும் நண்பர்களின் உள்ளத்தில் அன்பில்லாதிருப்பின் அது துன்பத்தை விளைவிக்கும் என்கிறது இன்னா நாற்பது. இதனை,

"கையாய நண்பினார் நாரின்மை இன்னா இன்னா

நயமில் மனத்தவர் நட்பு"

என்ற பாடலடியால் அறியப்படுகிறது

நட்பில் விசாலம் தேவை (Gowmareeshwari, 2012). பரந்த மனப்பான்மை வேண்டும். முகம் கோணாது நடத்தல் வேண்டும். பரந்த உள்ளம் பெறாது குறுகிய மனத்தையுடைய அற்பர்களோடு கொள்ளும் நட்பு துன்பமானது. ஒரு நண்பன் படுகின்ற துன்பத்தை உண்மையான நண்பனால் பார்க்கவே முடியாது. ஏனெனில் அவற்றைப் போக்குவதற்கு முயலுவான். நான் என்ற செருக்குடன் இருக்கிறவரோடு நட்பு கொள்ளுதல் துன்பத்தைத் தருமாம். நண்பர்களுடைய துன்பத்தைப் பார்த்தல் பெரிதும் துன்பத்தைத் தரும். இதனை,

"நட்டார் இடுக்கண் காண்டல் நனியின்னா"

எனச் சுட்டுகிறது (Gowmareeshwari, 2012). தீயவரோடு நட்பு பாராட்டுதல் துன்பத்தை ஏற்படுத்தும். கல்வி கேள்விகளில் சிறந்த சான்றோர்களோடு கொண்ட நட்பினைக் கைவிடுதல் துன்பத்தை ஏற்படுத்தும். இதனை,

"பெரியாரோ(டு) தொடர்விடுதல் இன்னா"

என்கிறது (Gowmareeshwari, 2012). மேலும்,

“நன்மை யிலாளர் தொடர்பின்னா”

என்ற பாடலடி நற்குணமில்லாதவருடைய நட்பு எக்காலத்தும் துன்பத்தைக் கொடுக்கும் என்கிறார் (Gowmareeshwari, 2012). நட்பைப் பற்றிக் கூறும்போது வள்ளுவப் பெருந்கையீர்,

“கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை

உள்ளினும் உள்ளம் சுடும்”

என்ற குறளில் துன்ப காலத்தில் கைவிடுவார் நட்பினை இறக்குங் காலத்தில் ஒருவன் நினைப்பானாயினும் அந்த இறப்பைவிட அந்த நினைவு (அவன் செய்தது) தான் மனத்தைச் சுடும் என்கிறார் வள்ளுவர். ஆராய்ந்து கொள்ளும் நட்பே சிறந்தது (Parimelalhagar, 1986).

## உழவு

உலகின் முதன்மையான தொழில் உழவு. விவசாயம் செழிக்க வேண்டுமானால் மழை வேண்டும். நீர் ஆதாரம் வேண்டும். இரண்டும் இல்லையெனில் விவசாயம் அழிந்து விடும். விவசாயிகள் இருந்தும் விவசாயம் செய்ய நிலம் இல்லையென்றால் மிகப்பெரிய அழிவைச் சந்திக்க நேரிடும். உழவுத் தொழில் செய்யும் உழவர்களுக்கு பல நேரங்களில் பல வடிவில் இன்னல்கள் வந்து சேரும். வள்ளுவர் உழவுக்கு ஒரு அதிகாரம் வகுத்துள்ளார்.

“சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்

உழந்தும் உழவே தலை”

என்கிறார் (Parimelalhagar, 1986).

“உழத்தல் என்பது இடைவிடாது முயலும் மெய்முயற்சியைக் குறிக்கும் சொல்லாகும். மழை, பனி, வெயில் என்னும் கால வேறுபாட்டால் உடம்புக்குளவாகத தொல்லைகளை ஒரு சிறிதும் பொருட்படுத்தாது, நெற்றி வியர்வை நிலத்தில் விழ இடைவிடாது உழைக்கும் மெய்ம்முயற்சி இப்பயிர்த் தொழிலுக்கு வேண்டப்படுவதால் இத்தொழிலை உழவு என்ற சொல்லால் பண்டையோர் வழங்கினர்” (Vellaivarananan, 1969). உழவுத் தொழிலுக்கு உழுவதற்குத் தேவையானவை எருதுகள். எருதுகள் இல்லையெனில் துன்பம். அவ்வாறு எருதுகள் இருந்தாலும் பருவ மழை தவறி, ஈரம் இல்லாத நிலத்தில் உழுவதும் துன்பத்தைக் கொடுக்கும் என்பதனை,

“எருதில்உழவர்க்கு போா(கு) ஈரம் இன்னா”

எனக் கூறுகிறது (Gowmareeshwari, 2012). மேலும் வயலில் நெல்லோ, கரும்போ பயிரிட்டால் அதனை வேலியடைத்துக் காத்தல் வேண்டும். இல்லையெனில் பாழ்பட்டு விடும். இதனை,

“சிறையில் கரும்பினைக் காத்தோம்பல் இன்னா”

எனச் சுட்டுகிறது. நிலத்தில் விதைத்த விதைகள் வளர்ந்து பயனைத் தந்தால் உழவர்க்கு மிகுந்த மகிழ்ச்சியினைத் தரும். பருவமழை தவறி விதைத்த விதைகள் விளையாமல் கருகிப் போனால் துன்பத்தைத் தரும். இதனை,

“நிலத்திட்ட நல்வித்து நாறாமை இன்னா”

என்கிறது (Gowmareeshwari, 2012). மேலும்,

“மாரிநாள் கூவும் குயிலின் குரலின்னா

மாரிவளம் பொய்ப்பின் ஊர்க்கின்னா”

என்ற பாடலில் மிகுதியான மழை பெய்யுமாயின் துன்பத்தை அளிக்கும் (Gowmareeshwari, 2012). அப்போது கூவும் குயிலின் ஓசை செவிக்கு இனிமை ஆகாது. அதுபோல மழைவளம் பொய்த்துப்

போகுமானால் மக்களுக்கு மிகப்பெரிய துன்பத்தை விளைவிக்கும். கட்டுக் கடங்காத வலிமை மிக்கக் காளையாலும் நிலத்தை உழுதல் கடினமாம். உணவுக்கு ஆதாரம் உழவுத் தொழில். உழவுத் தொழிலுக்கு ஆதாரம் மழை. அவ்வாறான மழை பொய்க்குமானால் விவசாயம் பொய்த்து விடும் என்பதுதான் உண்மை.

## முடிவுரை

மனிதத் தன்மை பெற்றவன் மனிதனாகிறான். மனிதத் தன்மையை இழக்க நேரிடும்போது அறத்தை வலியுறுத்த வேண்டிய சூழ்நிலை சான்றோர் பெருமக்களுக்கு ஏற்படுகிறது. எப்போதும் தம்மை ஒழுங்குக்கு உட்படுத்திக் கொண்டு ஒழுக வேண்டியது மானுடக் கடமை. தன்னில் இருந்து நீக்க வேண்டியவற்றை நீக்கவது அடிப்படை ஒழுங்காகின்றது. குடும்பம், சமூகம் என்ற இரு அமைப்புகளிலும் எதிர்மறையான செயல்பாடுகள் காணப்படுவதை இன்னா நாற்பது உணர்த்துகிறது. எதிர்மறையான எண்ணங்களையும் செயல்பாடுகளையும் கொண்டிருப்போமானால் அது தீய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை முன்னிறுத்துகிறது. அவ்வகையில் இன்னா நாற்பது, வாழ்க்கையில் ஏற்படும் பல துன்பங்களுக்கு காரணம் அறத்தைக் கடைபிடிக்காததே என வலியுறுத்துகிறது. வாழ்வியல் மதிப்புகளைப் பின்பற்றி வாழ்தல் வேண்டும் என உணர்த்துகிறது.

## References


Avvai Duraisami Pillai, S. (1966) Kurunthogai Moolamum Uraiyum, Aruna Publications, Chennai, India.

Avvai Duraisamy Pillai, S. (2010) Purananooru Moolam Uraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Gowmareeshwari, S. (2012) Pathenen Keelkanaku, saratha pathippagam, Chennai, India.

Parimelalhagar, (1986) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Vellaivarananan, K. (1969) Sangakalaa Tamil Makkal, Naam Thamilar, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License